27th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு உருப்படியாக காரணம் ஒன்றும் சொல்ல முடியாது. அதிகப்படியாக கவனம் செலுத்தினால் கேசுகள் அதிகமாக கண்டு பிடிக்கலாம். அதிகமாகக் குற்றங்களைச் செய்தால் அதிகமாக கேசுகளும் வரலாம்.

SRI M. K. SOMASUNDARAM : சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு பணக்காரர்கள் அதிகமாக உதவி செய்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அதனால் குற்றவாளிகளை தண்டிக்கும்போது பணக்காரர்களில் யார் உதவி செய்கிறார்களோ அவர்களுக்கும் இம்மாதிரி தண்டனை கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சட்ட மன்றத்தில் இதைப்பற்றி சமீபத்தில் ஒரு திருத்தச் சட்டம் செய்தபோது இது விஷயமாக கவனிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அளவில் திருத்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதன்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டும் வருகிறது.

SRI K. S. G. HAJA SHERIFF : பணக்காரர்கள் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். அப்படிப்பட்ட பணக்காரர்கள் என்பது யார், அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : யாரைக் கேட்கிறீர்கள் அந்தக் கேள்வியை? The hon. Member cannot put that question to me or to the Hon. Minister.

SRI T. R. RAMAMIRTHA THONDAIMAN : பல பிரதேசங்களில் மது காய்ச்சிக்கொண்டு வந்தாலும் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த மட்டில் பல குற்றங்கள் ஏற்பட்டதால் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டதால் இப்பொழுது அங்கே அவ்வளவு இல்லாமல் இருக்கிறது. அப்படி அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த மாதிரி தீவிரமாக வேலை செய்கிற அந்த அதிகாரிகளுக்கு நல்ல பரிசு வழங்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதைப்பற்றி ஆதரவு தெரிவித்தார். அதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப் பட்டவர்களுக்கு இப்பொழுது பரிசுகள் கொடுக்கத்தான் செய்கிறார்கள்.

Fire accidents

* 575 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of incidents of fire in Perambalur and Udayarpalayam taluks in (i) 1956–57, (ii) 1957–58 and (iii) 1958–59 till to-day;

(*b*) the estimated loss of property during each year due to fires;

(*c*) whether any representation has been received in June 1958, requesting the opening of a Madras Fire Service Station at Perambalur or Ariyalur; and

(*d*) the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*d*) A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix V on page 881 infra.

[27th September 1958

SRI S. LAZAR : அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட விபத்துகளினால் பல லட்சக்கணக்கான ரூபாய் சேதமாகிறது. இப்படி ஆண்டு தோறும் நடந்து வருகிறது. அதனால் அந்தப் பகுதியில் ஒரு பயர் சர்வீஸ் யூனிட்டை வைப்பதற்கு என்ன செலவாகும் ? அதைப்பற்றி சர்க்கார் உடனடியாகப் பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே இதைப்பற்றிய விவரங்களுக்கு பதில் அளித்து இருக்கிறேன். நிலைமையையும் விளக்கியிருக்கிறேன். நகரப்புரங்களிலும், நகரசபைகள் இருக்கக்கூடிய இடங்களிலும் இன்னும் அநேகம் பயர் சர்வீஸ் வைக்க வேண்டியதாக இருக்கிறது. அங்கேயெல்லாம் வைத்த பிறகுதான் பஞ்சாயத்து ஏரியாக்களுக்கு வைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். ப்ரையாரிட்டி லிஸ்ட் ஒன்று போடப்பட்டு அதன்படி கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI K. R. VISWANATHAN : உடையார்பாளையம் பகுதியில் அடிக்கடி இப்படிப்பட்ட தீ விபத்துகள் ஏற்படுகின்றன. அதனால் அதிகப் படியான நஷ்டம் ஏற்படுகிறது. அதனால் அரியலூரில் ஒரு பயர் சர்வீஸ் தீயணைக்கும் படை நிலையங்கள் வைக்கவேண்டும் என்று பல மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் முடிவு என்ன ? நண்பர் லாஸருக்குக் கொடுத்த பதிலின் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே சொன்னேன். பல நகர சபைகளுக்கு அநேகம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அவைகளுக்குக் கொடுத்த பிறகுதான் பஞ்சாயத்து ஏரியாக்களுக்கு வைக்க வேண்டும். நகர சபைகளுக்கு விஸ்தரித்த பிறகுதான் பஞ்சாயத்துகளில் வைப்பதற்கு கவனிக்கப்படும்.

SRI K. PERIANNAN : பெரம்பலூர் தாலுகாவில் தீ விபத்துகள் அநேகம் ஏற்பட்டு பல லட்சக்கணக்கான ரூபாயும், பொருளும், பல உயிர்களும் சேதமாகி இருக்கின்றன. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கனம் அங்கத்தினர் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

SRI S. LAZAR : அரசாங்கத்தின் பதிலிலிருந்து ஒரு ப்ரையாரிட்டி லிஸ்ட் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் அறிவிக்கிறார்கள். அந்த ப்ரையாரிடி லிஸ்ட் எப்பொழுது அமைக்கப்பட்டது ? அதை ரிவைஸ் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போழுது தயாரிக்கப்பட்டிருக்கக்கூடிய லிஸ்டின் பிரகாரம் முதலில் முனிசிபாலிட்டிகளிலும் நகரங்களிலும் வைக்கப்பட்ட பிறகுதான் மற்ற இடங்களைப்பற்றி கவனிக்கப்படும். முதலில் நகரங்களை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதற்குப் பிறகுதான் பஞ்சாயத்து பிரதேசங்கள் கவனிக்கப்படும்.

Literacy

MR. SPEAKER : Hon. Member Sri T. T. Daniel is not in his place. So, his question No. 576 and the answer thereto will be printed in the official proceedings.

* 576 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the percentage of literacy in the State (i) at present and (ii) in the beginning of the First Five-Year Plan period;